தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சித்திரை 6, யுவ – திருவள்ளுவர் ஆண்டு 2026

1995 ஏப்ரல் 19, புதன்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10.00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"அழுக்காறு உடையார்க்கு அதுசாலும் ஒன்னார்
வழுக்கியும் கேடீன் பது"

பொறாமை உடையவர்களுக்கு வேறு பகையே வேண்டாம். ஏனெனில், அவர்களுக்கு கேடு பயப்பதற்கு அவர்தம் பொறாமை ஒன்றே போதுமானது.

1. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள். வினா எண் 341, திரு. தா. வேடியப்பன், இருக்கையில் இல்லை.

வினா எண் 342, டாக்டர் எஸ். சுந்தரராஜ். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

342—

பரமக்குடியில் விருந்தினர் இல்லம் கட்டுதல்

***35497—**டாக்டர் எஸ். சுந்தரராஜ்:

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி வட்ட அலுவலகத்தில் விருந்தினர் இல்லம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எந்த ஆண்டு கட்டப்படும்?

[1995 ஏப்ரல் 19

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் மக்களாட்சியில் நம்பிக்கை கொண்டு, மக்களை மதிக்கின்ற அதிகாரிகளை மாண்புமிகு தமிழக முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஊக்குவித்து, மக்களுக்காக செயல்படுகின்ற அதிகாரிகளுக்கு பல்வேறு நல்ல காரியங்களைச் செய்து வந்துள்ளதை, மக்கள் மனதாரப் பாராட்டுகிற இந்த வேளையில், மாண்புமிகு தமிழக முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில், அதிகாரிகள் வந்து தங்குகின்ற வகையில் பரமக்குடி வட்ட அலுவலகத்தில், விருந்தினர் இல்லம் கட்ட வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும், வட்டாட்சியர் அவர்களும் அரசுக்கு பரிந்துரை செய்து, அது பொதுப் பணித்துறை மூலம் அனுப்பப்பட்டுள்ளது. மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் அதற்கு முக்கியத்துவம் கொடுத்து, அங்கே ஒரு விருந்தினர் இல்லம் கட்ட முன்னுரிமை அளித்து, கட்ட முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் எந்தெந்த இடங்களில் விருந்தினர் மாளிகை கட்டவேண்டும் என்றும், எந்தெந்த விருந்தினர் மாளிகைகள் யார் யாருடைய மேற்பார்வையில் இருக்கவேண்டும் என்றும் விதிமுறைகள் இருக்கின்றன. அப்படி விதிமுறைகள் இருக்கிறபோது, சில விருந்தினர் மாளிகைகள் மாவட்ட ஆட்சித் தலைவருடைய மேற்பார்வையில் இருக்கின்றன. சில விருந்தினர் மாளிகைகள் பொதுப்பணித்துறையினுடைய மேற்பார்வையில் இருக்கின்றன. அதனுடைய முக்கியத்துவத்தைக் கருதி, விருந்தினர் மாளிகையினுடைய தகுதிக்கு ஏற்றவாறு, சில விருந்தினர் மாளிகைகள் நெடுஞ்சாலைத் துறையினுடைய மேற்பார்வையில் இருக்கின்றன. எல்லா விருந்தினர் மாளிகையும் நேரடியாக அரசினுடைய அதிகாரத்திற்கு உட்பட்டது. தேவையான இடங்களில் விருந்தினர் மாளிகைகள் கட்டப்படும். விருந்தினர் மாளிகைகள் அலுவலகங்களுக்கு அருகாமையில் கட்டவேண்டும் என்பது அல்ல. மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் ஆனாலும் சரி, கோட்ட வருவாய்த்துறை அதிகாரி அலுவலகம் ஆனாலும் சரி, கோட்ட வளர்ச்சித் துறை அலுவலகம் ஆனாலும் சரி, அதேபோன்று வருவாய்த் துறையினுடைய வட்ட வருவாய்த்துறை அலுவலகம் ஆனாலும் சரி, பொதுப்பணித் துறையானாலும் சரி, அலுவலகங்களுக்கு அருகாமையில் கட்ட வேண்டும் என்பது அல்ல. இருக்கிற விருந்தினர் மாளிகைகள் யாருடைய மேற்பார்வையில் இருந்தாலும் சரி, அரசினுடைய அதிகாரிகள் யார் வேண்டுமானாலும் அங்கே போகிறபோது அவர்களுடைய

1995 ஏப்ரல் 19]

தகுதிக்கு ஏற்றவாறு அவர்களுக்கு தங்குவதற்கு விருந்தினர் மாளிகை அளிக்கப்படும்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் இந்தியாவிற்கே வழிகாட்டுகின்ற, புதுப்புது திட்டங்களைச் செயல்படுத்துகின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில், பரமக்குடி நகரம் மாவட்டத்தின் மத்தியில் அமைந்திருப்பதாலும், தேசிய நெடுஞ்சாலையின் நடுவில் அமைந்திருப்பதாலும், பல்வேறு அதிகாரிகள் அங்கே வருகிறபோது — அரசியல் தலைவர்களுக்கு எல்லாம் நெடுஞ்சாலைத்துறை மற்றும் பொதுப்பணித் துறையினுடைய விருந்தினர் இல்லங்கள் கொடுக்கப்பட்டு விடுவதால் — அதிகாரிகள் மிகவும் அல்லல்படுகிற சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, இன்றையதினம் புதுப்புது திட்டங்களை வகுத்து வருகின்ற மாண்புமிகு தமிழக முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் புதுத் திட்டமாக, கோட்டாட்சியர் மற்றும் வட்டாட்சியர் அலுவலகங்கள் அருகாமையில், அதிகாரிகள் தங்குவதற்காக தங்கும் விடுதிகள் – விருந்தினர் இல்லங்கள் – அமைக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரமக்குடியில் விருந்தினர் மாளிகை இல்லாமல் இருந்தால், அதைக் கட்டுவதற்கு அரசு முயற்சி எடுக்கும். விருந்தினர் மாளிகைகள் கட்டியிருக்கிறபோது, அது பொதுப்பணித்துறையினுடைய மேற்பார்வையில் இருந்தாலும் சரி, நெடுஞ்சாலைத் துறையினுடைய மேற்பார்வையில் இருந்தாலும் சரி, அது எல்லோருக்கும், எல்லா அதிகாரிகளுக்கும் சொந்தம். அவை இந்தந்தத் துறைகளுக்கு என்று அல்ல. எனவே, பரமக்குடியில் விருந்தினர் மாளிகை இல்லை என்றால், அதைக் கட்டுவதற்கு அரசு முயற்சி எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 343, திரு. க. அர்ச்சுனன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

ALONE TRIUMPH

343—

மனநோயாளிகளுக்கு சிகிச்சை அளித்தல்

21483—திரு. க. அர்ச்சுனன்:*

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தற்பொழுது மனநோய் மருத்துவமனைகளில் நோயாளிகளை அனுமதிக்கப்படுவதில் சில வரைமுறைகளை வைத்திருப்பதைத் தவிர்த்து சிகிச்சை பெற விரும்புபவர்களுக்கு எல்லாம் சிகிச்சை அளிக்கப்படுமா?